**MAY 2024** **U/ID 30619/ULA3A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. நற்றிணையின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியது யார்? நற்றிணை யாரால் தொகுக்கப்பட்டது?

2. விரிச்சி என்றால் என்ன?

3. புகார் நகர உமணர்களின் தொழில் என்ன?

4. 'நிலமிசை நீடு வாழ்வார்' – யார்?

5. 'மறைமொழி காட்டி விடும்' – எது? ஏன்?

6. 'செல்வம் வரும் போகும்' – எவ்வாறு? – நாலடியார் வழி விளக்குக.

7. சீவக சிந்தாமணி எச்சமயக் காப்பியம் மற்றும் அதனை எழுதியவர் யார்?

8. ஐம்பெருங்குழு என்றால் என்ன?

9. தில்லையம்பலத் திருக்கூத்து ஆடுபவன் யார்?

10. பெயர்க்காரணம் தருக : ஆற்றுப்படலம்.

11. தொகைநிலைச் செய்யுள் என்றால் என்ன?

12. அசை என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. நற்றிணையின் குறிஞ்சித் திணைப்பாடலின் தலைவி தோழிக்குக் கூறியவற்றை எழுதுக.

14. பாண்டியன் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதியை இரும்பிடர்த்தலையார் பாடிய பாடற் கருத்துக்களை விளக்குக.

15. செல்வம் நிலையாமை மற்றும் அறம் இப்போதே செய் என்ற நாலடியாரின் பாடல் செய்திகளை விளக்குக.

16. இந்திர விழாவை வள்ளுவன் எவ்வாறு நகர மக்களுக்கு அறிவித்தான்?

17. மேகத்தின் தன்மையாகக் கம்பராமாயணம் கூறுவனவற்றை விளக்குக.

18. மழை வெள்ளத்தைக் கம்பராமாயணம் வழிநின்று எடுத்தியம்புக.

19. செய்யுள் வகைகள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. பட்டினப்பாலையில் இடம்பெற்றுள்ள காவிரியின் சிறப்பினை விளக்குக.

21. வான் சிறப்பு அதிகாரச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

22. சிலம்பின் கண்ணகி மற்றும் கோவலன் அறிமுகத்தைக் காட்சிப்படுத்துக.

23. நும்பாடப்பகுதியில் இடம்பெறும் பெரியபுராணப் பாடல்களின் கருத்துக்களை விளக்குக.

24. அணியிலக்கணம் குறித்து எழுதுக.

———————